# வறுமையின் இடம்சார் பாங்கு – தெல்லிப்பளை பிரதேச செயலகர் பிரிவை அடிப்படையாகக் கொண்டது

**வைஷ்ணவி, ஞா., அன்ரனிராஜன், அ.**
புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
vaishu29navi@gmail.com

*தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவின் நுண்மட்டங்களுக்கிடையிலான வறுமையின் இடஞ்சார் பாங்குகளை மதிப்பிடும் வகையில் ஆய்வானது மேற்கொள்ளப் பட்டுள்ளது. ஆய்வுப்பகுதியானது யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அதிகளவில் மீள்குடியேற்றங் களையும் கொண்டுள்ளமையால், அதிக வறுமை நிலவுகின்றது. வறுமையின் இடஞ்சார் பாங்கினை நுண்மட்ட ரீதியில் அறிவதன் மூலமாக வறுமையை குறைப்பதற்கான திட்டங்கள், கொள்கைகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். பிரதேச செயலக ஆண்டறிக்கை யினை தரவு மூலமாக கொண்டு இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டு பெறப்பட்ட பெறுபேறு களினடிப்படையில் கள அவதானிப்பு, கட்டமைக்கப்பட்ட நேர்காணல் என்பன மேற்கொள்ளப்பட்டன. தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் 45 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. இதில் மூன்று கிராம அலுவலக பிரிவுகள் உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்து இன்றளவும் விடுவிக்கப்படாத நிலையில் இருப்பதால் அவற்றுக்கான தரவுகள் இல்லை. ஏனைய 42 கிராம சேவகர் பிரிவுகளில் கிடைக்கப்பெற்ற தரவுகளினடிப் படையில் ஆய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது. நிரந்தர வீட்டுவசதி, மின்சாரவசதி உள்ள வீடுகள், பெண் தலைமைத்துவ குடும்பங்களின் எண்ணிக்கை, 25,000இற்கு மேற்பட்ட மாத வருமானத்தைப் பெறும் குடும்பங்கள், தங்கி வாழ்வோர் எண்ணிக்கை , நிரந்தர தொழில் புரிவோர் எண்ணிக்கை, சமுர்த்தி பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை போன்ற வறுமையுடன் தொடர்புடைய விடயங்கள் குறிகாட்டிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டன. தெரிவு செய்யப் பட்ட குறிகாட்டிகள் ஒவ்வொன்றும் வீச்சு சமநிலைப்படுத்தல் முறைக்கு உட்படுத்தப்பட்டு தரவு அலகு வேறுபாடு நீக்கம் முறைக்கு மாற்றியமைக்கப்பட்டன. பின்னர் குறிகாட்டிகள் கூட்டுச்சுட்டெண் பகுப்பாய்வு முறைக்கு உட்படுத்தப்பட்டு இடம்சார் வறுமையின் பாங்கானது மதிப்பிடப்பட்டது. அதன் அடிப்படையில் வறுமை யின் இடம்சார் பாங்கானது அதியுயர் மட்டம், உயர்மட்டம், இடைமட்டம், தாழ்மட்டம் என படமாக்கம் செய்யப் பட்டது. அந்த வகையில் 03 கிராமசேவகர் பிரிவுகள் அதியுயர் மட்டத்திலும், 10 கிராம சேவகர் பிரிவுகள் உயர்மட்டத்திலும், 19 கிராமசேவகர் பிரிவுகள் இடைமட்டத்திலும், 10 கிராமசேவகர் பிரிவுகள் தாழ்மட்டத்திலும் காணப்படுகின்றன. இவ் ஆய்வின் மூலம் தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவுகளுக்கிடையில் காணப்படுகின்ற வறுமையின் நுண்மட்ட ரீதியிலான இடம்சார் பாங்குகளினை விளங்கிக் கொள்ள முடிந்துள்ளது. நுண்மட்டரீதியில் வறுமை அதிகம் காணப்படும், மீள்குடியேற்றப்பகுதிகளில் முன்னுரிமை செலுத்தப்பட்டு திட்டமிடல், கொள்கைகளை சரியாக வகுப்பதன் மூலம் வறுமையின் இடஞ்சார் பாங்குகளின் வேறு பாடுகளைக் குறைத்துக்கொள்ளலாம். எனவே பிரதேச அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு நுண்மட்ட ரீதியிலான வறுமையின் இடஞ்சார் பாங்குகளின் வேறுபாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.*

**திறவுச்சொற்கள்:** வறுமை, இடம்சார் பாங்கு, குறிகாட்டிகள், கூட்டுச்சுட்டெண்